1977 ஜூலை 27]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஊதியக் குழுவுக்கு அரசு ஆலோசனை கூறிக்கொண்டிருக்க முடியாது. டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் அடிப்படையில் அவர்கள் அறிக்கை தருவார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய அரசு ஊழியர்கள் பெறுகிற சம்பளத்திற்கேற்ப, மாநில அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்க முடியாவிட்டாலும், பஞ்சப்படியையாவது அந்த அளவுக்குக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஊதியக் குழுவின் சிபார்சுக்குப் பிறகு, நாம் எடுக்க வேண்டிய முடிவு இது என்பதை கனம் உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

அடையாற்றில் ஏற்பட்ட தீ விபத்து பற்றியும் அதனால் ஏற்பட்ட சேதம் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. வி. கே. கோதண்டராமன், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் அடையாற்றில் 1977 ம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் நாள் அன்று ஏற்பட்ட தீ விபத்து பற்றியும் அதனால் ஏற்பட்டுள்ள சேதம் குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். நேற்றைய முன்தினம் கள்ளக்குறிச்சியில் 144 தடை உத்தரவு போடப்பட்டிருக்கிறது. விவசாயிகள் இரண்டு மாதங்களாகப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக நான் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொடுத்திருக்கிறேன். அது என்னவாயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னவாயிற்று என்று இங்கே கேட்கக் கூடாது. என்னை அறையில் வந்து கேளுங்கள். அதுபற்றி இங்கே விவாதம் எழுப்பக் கூடாது. இது பாயின்ட் ஆப் இன்பர் மேஷன் கீழ்வரா

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice of the following adjournment motion.

'That the business of the House be adjourned to discuss the following urgent matter of public importance, namely, that the outbreak of fire at Adyaru on 25—7—1977 at 1·00 p.m. causing destruction to about 250 houses etc., and lose amounting to more than a lakh of rupees and the tense situation prevailing in that locality.'

25ம் தேதி அன்று சென்னை அடையாறு பகுதியில் குடிசைகள் அதிகமாக இருக்கின்ற இடத்தில் பகல்வேளையில் நெருப்பு பற்றி எரிந்து 200க்கு அதிகமான வீடுகள் எரிந்து சாம்பலாயின ; அதோடு ஏராளமான பொருள் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது. இதனுல் ஏகதேசம் நாலாயிரம் பேர்களுக்கு அதிகமாகப் பாதிக்கப் பட்டிருக்கிறுர்கள்.

இந்த நிகழ்ச்சி நடந்தபோது மதியம் ஒரு மணி அளவில் இருக்கும். 1 மணி அளவில் பையர் சர்விஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுத்தபோதிலும் பயர் சர்வீஸ் அங்கு வந்து தீ அணைப்பு வேலைகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டதாகவும், அங்கு வந்த பயர் சர்வீஸ் கூட முறையாக அந்தப் பணியை மேற்கொள்ளாது அதிகமாகச் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு கொண்டுவந்துள்ள குழாய்கள் பழுதுபட்டிருந்த காரணத்தால் தண்ணீர் எடுக்கிறபோது தண்ணீர் தீயை அணைப்பதற்குப் பதிலாக வெளியே சென்றுகொண்டிருந்த காரணத்தாலும் முழு அளவிற்கு அது பயன் கொடுக்காத காரணத்தால்அதிகமாகச் சேதம் ஏற்பட்டதாகவும் கூறப்பட்டது.

நான் இத்தீர்மானத்தைக் கொண்டுவருவதற்குக் காரணம் அரசு நிவாரண வேலைகளைப் போதுமான அளவிற்கு மேற்கொண்டிருந்தபோதிலும், இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்படுகிறபோது தீயை அணைக்க அதிக அக்கறை எடுக்கவேண்டும், தீ அணைப்பு இலாகா இன்னும் தீவிரமான முறையில் நல்லமுறையில் செயல்பட வேண்டும், அரசாங்கம் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தை நான் கொடுத் திருக்கிறேன்.

சென்னைப் பட்டணத்தில் ஏற்பட்ட தீ விபத்து இது. தக்குந்த முறையில் அதிகப்படி சேதம் வராமல் இருக்கவும், தீ விபத்து ஏற்பட்டால் அது பரவாமல் இருக்கவும் இந்த இலாகாவை விஸ்தரிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கத்திலிருந்து நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிவாரணம் அளிக்கிற முறையில் அரசியல் கண்ணேட்

டம் ஒன்றும் இல்லாமல், டெனமென்ட்ஸ் வழங்குகிறபோது உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு—அவர்கள் குடிசைச் சொந்தக்காரர்களாகவும் இருக்கலாம், வாடகைக்காரர்களாகவும் இருக்கலாம்—வாடகைக்கு இருக்கிறவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை என்ற பராதி இருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் வழங்கவேணடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சொன்னுல் நல்லது. புது விஷயங்களுக்குப் போகாதீர்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : அரசாங்கம் பணம் கொடுக்கிருர்கள். அப்படிப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக அந்த சாமான்களை வாங்கிக் கொடுத்தால் பயன் உள்ளதாக இருக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட இது மிகவும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த காரியம், ஆதலால் இதுபற்றி விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(முற்பகல் 9-10)

திரு. வி. கே. கோதண்டராமன் : அவைத் தலைவர் அவர்களே, அடையாறு பகுதியிலுள்ள நாராயணசாமித் தோட்ட குடிசைப் பகுதியில், சுமார் 200 குடிசைகளில் தீ பிடித்து சாம்பலாகியுள்ளன. குடிசையில் வாழ்கின்றவர்கள் எப்பேர்ப் பட்டவர்களாக இருப்பார்கள் என்பது நான் சொல்லாமலேயே எல்லோருக்கும் தெரிந்த விஷயம். குடிசைகளில் தீ பிடிப்பதற்கும் இந்த அரசுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டுவிடக்கூடாது. திடீரென்று தீ பிடித்திருக்கிறது. இதனுல் ஏழை மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ருர்கள். அவர்கள் உறங்குவதற்கு இடமில்லை, உண்ணுவதற்கு உணவில்லை, உடுப்பதற்கு உடையில்லை. இப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற பாமர மக்களுக்கு வெறும் 80 ரூபாய் மட்டும் கொடுத்து விட்டால், அவர்கள், என்ன செய்வார்கள் இப்போது மூங்கில், ஓலை, இவைகளின் விலை, கூலி இவை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று பார்த்தால், முன்பு இருந்ததை விட இரண்டு, மூன்று மடங்கு அதிகமாகியிருக்கிறது. இதையும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீ விபத்தைப்பற்றி விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. இது எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது, என்ன காரணத்தினுல் இந்த அவையை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சுருக்கமாகச் சொன்னுல் போதும், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆகவே தான் இந்த ரூபாயை அதிகப்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளோடு தான் இதைக் கொண்டு வந்திருக்கிறேன். இதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவை அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அவைத் தலைவர் அவர்களே, அடையாறு பகுதியிலுள்ள விபத்தைப்பற்றி இங்கே உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தார்கள். இது அடையாற்றில் மட்டும் ஏற்படுகிற விபத்து அல்ல, சென்னையில், பல இடங்களில் இதற்கு முன்னல் சமீபகாலத்தில் இப்படிப்பட்ட விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட விபத்துக்கள் எப்படி ஏற்படுகின்றன, ஏன் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி நாம் பரிசீலித்தாக வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் ஏழை மக்கள் தங்கள் துணிமணிகள் பாத்திர பண்டங்கள் இவைகளை எல்லாம் இழந்துவிட்டு, தவிக்கக் கூடிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதை போக்குவதற்கான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். தீ விபத்து எப்படி நடந்தது என ஆராய்வதோடு இனிமேல் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் நாம் எடுத்தாக வேண்டும்.

அது மட்டுமில்லாமல், இப்போது கொடுக்கப்படுகின்ற தொகை மிகவும் சிறு தொகையாக இருக்கிறது. இதைக் கொண்டு அவர்கள் தங்கள் வாழ்க்கையை எந்த அளவுக்கு புனர் அமைத்துக் கொள்ள முடியும் என்பதையும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் ஏற்பட்டிருக்கின்ற நஷடத்தை ஈடு செய்கின்ற அளவுக்கு ஏதாவது செய்தாக வேண்டும். அதைப்பற்றி இந்த அவையில் விவாதிப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 25—7—1977 அன்று மதியம் சுமார் 2.00 மணி அளவில் சென்னை அடையாறுக்கு அருகிலுள்ள கபாலி வன போஜன தோட்டம், அபிராமிபுரம் என்ற இடத்தில் பலத்த காற்று வீசியதால் அங்கிருந்த குடிசைகளில் தீ விபத்து ஏற்பட்டு, பரவியது. செய்தியறிந்தவுடன் தீயணைக்கும் படையினரும் காவல் துறையினரும் தலத்திற்கு விரைந்து சென்று மிகவும் போராடி தீயை அணைக்க வேண்டியிருந்தது. 16 தீயணைப்பு வண்டிகள் சென்னையின் பல பகுதிகளிலிருந்தும் தலத்திற்கு விரைந்து சென்றன. அக்குடிசைப் பகுதி தென்னை மரங்கள் சூழ்ந்த ஓரிடத்தில் அமைந்திருந்தது. இவ்விபத்தில் மனிதஉயிர் இழப்பு எதுவுமில்லை. சுமார் 120 குடிசைகளும், வைக்கோல் போரும், ஒரு ஆடும், ஒரு நாயும், ஒரு பூனையும் தீக்கு இரை

யாக வேண்டியிருந்தன. அந்தக் குடிசைப் பகுதியைச் சேர்ந்த திருமதி குள்ளம்மாள், இலக்குமி, சின்னத்தாய், தனபாக்கியம் ஆகிய நால்வரும் தீக் காயங்களுடன் அரசு இராயப்பேட்டை மருத்துவ மனையில் சிகிச்சையின் பொருட்டு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

விபத்துக்கான காரணங்கள் புலன் விசாரணையில் உள்ளது. சுமார் ரூபாய் 75,000 பெறுமானமுள்ள சொத்துக்கள் சேதமடைந்தன. சுமார் ரூபாய் 98,000 பெருமானமுள்ள சொத்துக்கள் காப்பாற்றப்பட்டன.

சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவும், உறைவிடமும், தாற்காலிகமாக ஏற்பாடு செய்தார். இந்தத் தீ விபத்தினால் சுமார் 261 குடும்பங்கள் வீடு இழந்திருக்கின்றன. அவர்கள் தற்காலிகமாக அருகிலுள்ள இராஜா முத்தையா செட்டியார் பள்ளியிலும், காமராஜ் மாநகராட்சிப் பள்ளியிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையின்படி 120 குடிசைச் சொந்தக்காரர்களும், 178 குடியிருப்புத்தாரர்களும் தங்கள் உடைமைகளை இந்தத் தீ விபத்தினால் இழந்திருக்கின்றனர். குடிசையின் சொந்தக்காரர் ரூபாய் 80-ம், குடியிருப்புதாரர் ரூபாய் 20-ம் பெறுவதற்கு தகுதியுடையவராவார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், குடிசைச் சொந்தக்காரருக்கு ரூபாய் 100-ம் குடியிருப்புதாரருக்கு ரூபாய் 25-ம் விசேஷச் சலுகையாக வழங்க வேண்டி வருவாய்த்துறை வாரியத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கான செலவு ரூபாய் 16,450 ஆகிறது. வருவாய்த்துறை வாரியம் அரசிடமிருந்து அனுமதி கேட்கவிருக்கிறது. மேலே கூறிய அனுமதி கிடைத்தவுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிதி உதவி உடன் வழங்கப்படும்.

இதற்கிடையில், செஞ்சிலுவைச் சங்கம், சமூக சேவை சங்கம் ஆகிய சில சமூக நல இயக்கங்களிடமிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி, உணவு, பால், உடை, பாத்திரங்கள் முதலியன வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இத் தீ விபத்து குறித்து, மைலாப்பூர் காவல் நிலையத்தில் குற்றவியல் எண். 2377/77-ல் ஐ.பி.சி. 436-ம் பிரிவின்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் இருந்து வருகின்றது. சென்னை நகரின் மற்ற குடிசைப்பகுதிகட்கும் முன்னெச்சரிக்கையாக காவல் துறையின் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய நிதி மற்றும் மற்ற உதவிகளும் அரசு செய்வதகுற்

உடன் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, இச்சம்பவம் பற்றி விவாதிக்க பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்று கூறி இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

The Hon. Thiru K. MANOHARAN: Mr. Speaker, Sir permit me to read a statement under Rule 82 (A) of our Assembly Rules.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே சொல்வதற்கு இருந்தேன். பரவாயில்லை. இப்போது சொல்லுங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விதி 82 (ஏ) பிரிவின் கீழ் விளக்கம் அளிப்பார்கள்.

3. தகவல் கோரல் :

(அ) ஒத்திவைப்புத் தீர்மானங்கள் சிலவற்றை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து; இன்னும் சில அட்ஜர்ன்மெண்ட் மோஷன்கள்எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையும் எடுத்துக் கொண்டு, அதற்குப் பின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்தால் நல்லது. எனவே, அவைகளையும் சேர்த்தார்போல் எடுத்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கின்ற ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது தகவல்கள் சேகரிக்க வேண்டியிருப்பதால், அதை இன்றைக்கு எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 82-வது விதியின் கீழ் அறிக்கை சமர்ப்பிக்கட்டும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நானும் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். நேற்று நண்பகல், நகரத்தில் மிகவும் பயங்கரமான, மிருகத்தனமான, வன்முறைத் தாக்குதல்கள் மாணவர்கள் மீது.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் இன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படப் போவதில்லை. எத்தனை மணிக்குக்கொடுத்தீர்கள்? எதையும்சற்றுபொறுப்புணர்ச்சியோடு பேசுங்கள். காலை 8—48-க்கு என் அறையில் கொண்டு